புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# தொல்காப்பியம் இடையியல் வழி சிலப்பதிகாரத்தில் இடைச்சொற்கள்

ச. உஷா
முழு நேர முனைவர்பட்ட ஆய்வாளர்.,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல்
கல்லூரி., திருவண்ணாமலை.

முனைவர் கி.இரமேஷ்.,
நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல்
கல்லூரி.,திருவண்ணாமலை.

=====================================================================

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் சொல்லதிகாரம் – இடையியலில் குறிப்பிடப்பட்டுள்ள இடைசொற்களின் வழி சிலப்பதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இடைசொற்கள் அறிதல். இதன்வழி காப்பிய காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இடைசொற்கள் அறிதல்.

## முன்னுரை

ஒரு சொல்லின் பெயருக்கும் வினைக்கும் இடையில் நின்று அந்த சொல்லுக்கான பொருளை விளக்குபவையே இடைச்சொற்களாகும். அவ்இடைசொற்களை இலக்கண நூலாசிரியர்கள் வகைபடுத்தியுள்ள முறையில் இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும் பகுபத உறுப்பிலக்கணம் சொற்புணர்ச்சி விதிகளை அடிப்படையாகக் கொண்டு சொற்கள் பிரிக்கப்பட்டு இடை சொற்கள் அறியப்படுகின்றன.

இடைச் சொற்களானது தொடருக்குமுன் அடையாகவும் இணைப்பிடை சொற்களாகவும் பயன்பட்டு அந்த சொல் அல்லது தொடரின் பொருளை உணர்த்துகின்றன. இடைசொற்களுக்கென தனித்த அகராதிப்பொருள் இல்லை;இலக்கணப்பொருளைக் கொண்டே அறியப்படுகின்றன. சொற்களின் இறுதியில் இடம்பெறும் விகுதிகளும் ஒட்டு சொற்களும் இடை சொற்களாக அறியப்படுகின்றன. சொற்களின் இடையில் முழு சொற்களாக வருபவை, விகுதி,ஒட்டு போன்றவற்றை சொற்களைப் பிரித்துப் பொருள் உணரும் இடங்களைக்கொண்டு இடைச்சொற்களினை கண்கொண்டே உணர வேண்டியுள்ளது.

## இடைச்சொல்

சொற்களை இலக்கண ஆசிரியர்கள் பெயர்ச்சொல், வினைச்சொல்,இடைச்சொல்,உரிச்சொல் என நான்கு வகையாக பாகுபடுத்திக் கூறியுள்ளனர். இவற்றுள் இடைச்சொல்லானது தனித்து இயங்காமல் பெயர்ச்சொல் ,வினைசொற்களைச் சார்ந்தே இயங்கும். மேலும் தனித்த அகராதிப்பொருள் இன்றியும் காணப்படுகின்றன. இருப்பினும் சில இடங்களில் முழு சொற்களாக வரும் இடங்களில் அகராதிப்பொருள் தருவனவாகவும் இடைசொற்கள் உள்ளன.

தொல்காப்பியர் இடைசொல்லுக்கான பொது இலக்கனத்தை,

"இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும்; தமக்கியல் பிலவே"[1] என்ற நூற்பாவின் வழி குறிப்பிடுகின்றார்.

மேலும், அவற்றின் வகைகளை ஏழாக வகைபடுத்திக் கூறியுள்ளார்.

இதனை,

"புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கில் காலமொடு வருநவும்
வேற்றுமை பொருள்வயின்……"[2] என்ற நூற்பாவினைக்கொண்டும் அறிய முடிகின்றது.

இடைச் சொல் நிற்குமிடமும் திரிந்து வேறுபடும் விதத்தினையும் (தொல்.சொல். 736) என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.

*தொல்காப்பியர் குறிப்பிடும் இடைச் சொற்கள்*

*1. சொற்கள் புணருமிடத்து தோன்றும் 'சாரியைகள்'*

*2. செயல் நிகழுமிடத்து,பால்காட்டும் விகுதிகளாகவரும் வினைசொற்கள்*

*3. சொற்களின் பொருளை வேறுபடுத்த உதவும் வேற்றுமை உருபுகள்*

*4. தனக்கென தனித்தப் பொருளின்றி 'அசைச்சொல்லாக' பொருளுணர்த்துபவை*

*5. இசைநிறை சொற்கள்*

*6. தத்தம் குறிப்பால் பொருளுணர்த்துபவை*

*7. ஒப்புமை கூறும் இடங்களில் பயன்படும் உவம உருபுகள் போன்றவை தொல்காப்பியர் குறிப்பிடும் இடைச் சொற்களாகும்.*

*நன்னூலார் குறிப்பிடும் இடைச்சொற்கள்*

*நன்னூலார் இடைச்சொற்களை எட்டாக வகைபடுத்தியுள்ளார்.*

*இதனை,*

*"வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்*
*தத்தம் பொருள விசைநிறை யசைநிலை..."[3] என்ற நூற்பா வழி அறியலாம்.*

*தொல்காப்பியர் கூறியவற்றுள்,குறிப்பால் தத்தம் பொருளுணர்த்துவன என்பதனை,நன்னூலார் தனித்தனியே விளக்கியுள்ளார்.*

*தொல்காப்பியம் நன்னூல் வழி இடையியல்*

*தொல்காப்பியம் நன்னூல் என இரண்டிலும் நூல் முழுவதும் இடைசொற்கள் விரவி கணப்படுகின்றன. (வேற்றுமை உருபுகள், சாரியை,உவம உருபுகள்,வினையுருபுகள்) இவை தவிர்த்து இசைநிறை,அசைநிலை, தத்தம் குறிப்பால் பொருளுணர்த்துபவையேஇடையியலில் விளக்கப்பட்டுள்ளன. இதனால், குறிப்பிட்ட சில இடைச்சொற்களை மட்டுமே இலக்கண ஆசிரியர்கள் இடையியலில் விளக்கிக்காட்டியுள்ளதை அறியலாம்.*

*தொல்காப்பியர் (தொல்.சொல்.737-779) வரை இடைசொற்களை விவரித்துக் கூறியுள்ளார். இடைச்சொல்லுக்கு புறனடையாக வருவனவற்றை (தொல்.சொல்.780,781)-ல் குறிப்பிட்டுள்ளார்.*

*நன்னூலார் இடைச்சொற்களை (நன்.சொல்.422-441) முடிய தொல்காப்பியர் கூறிய வழியும் சில இடங்களில் வேறுபட்டும் விளக்கியுள்ளதை அறிய முடிகின்றது.*

*சிலப்பதிகாரத்தில் (தொல்காப்பிய – இடையியல் வழி) இடைச்சொற்கள்*

*மன் – இடைச் சொல்*

*"கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று*
*அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே"[4] என்பதன் வழி 'மன்' என்னும் இடைச்சொல்லானது கழிவு,ஆக்கம்,ஒழியிசை என்னும் மூன்று பொருண்மைகளில் அமையும் என்பது அறியப்படுகின்றது.*

*மன் என்னும் இடைச்சொல்லானது சிலப்பதிகாரத்தில் 7 இடங்களில் இடம் பெற்றுள்ளது.*

*"காதலாள் பெயர்மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ"[5]*

*இங்கு 'மன்' இடைசொல்லானது போற்றுதலுக்குறிய என்றும் நிலைபெற்று நிற்கின்ற என்னும் ஆக்கப்பொருள்களில் அமைந்துள்ளது.*

*உம் – இடைச்சொல்*

*உம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை,*

*"எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை.."[6] என்ற நூற்பாவில் மூலம் குறிப்பிட்டுள்ளார்.*

*உம் இடைச்சொல் சிலம்பில் 1,743 பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ளது.*

*"முழங்கு கடல்ஞாலம் முழுவதும் வரினும்"[7] என்பதன் வழி 'உம்' என்னும் இடைச்சொல்லானது முற்றுப்பொருளிலும் சிறப்புப்பொருளிலும் அமைந்துள்ளதைக் காணலாம்.*

*'உம்' இடைச்சொல்லானது எண்ணும்மையாகவும் வினைச் சொல்லின் இறுதியில் நின்று காலம் காட்டுவதாகவும் மாறும். அத்துடன் உம் – உந்து என வருதலும் உண்டு. இதனை (தொல்.சொல்.772,776,777) நூற்பாக்களைக் கொண்டு அறியலாம்.*

*ஓ – இடைச்சொல்*

*"பிறிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை.."[8] என்பதன் வழி,ஓகார இடைச்சொல்லானது பிரிநிலை,வினா, எதிர்மறை,ஒழியிசை,தெரிநிலை, சிறப்பு என்னும் ஆறு பொருண்மையில்*

*அமைந்துள்ளன. மேலும் 'ஓ ' காரம் அளபெடையாகவும் வரும் என்பதனை (தொல்.சொல்.746) வழி அறியலாம்.*

*சிலப்பதிகாரத்தில் 112 இடங்களில் 'ஓ' என்னும் இடைச்சொல் இடம்பெற்றுள்ளது.*

*"செயலெழுதித் தீர்த்தமுகம் திங்களோ காணீர்"[9] இங்கு வியப்புக்குரிய வினாப்பொருளில் 'ஓ' காரம் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.*

*ஏ – இடைச்சொல்*

*'ஏ' இடைச்சொல்லானது சிலப்பதிகாரத்தில் 287 இடங்களில் இடம்பெற்றுள்ளது.*

*"பொழில்தரு நறுமலரே புதுமணம் விரி மணலே"[10] இப்பாடல் வரியில் ஏகாரமானது எண்ணுதல் பொருளில் ஈற்றசையாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.*

*'ஏ' கார இடைசொல் (தொல்.சொல்.742) - ன் மூலம் ,தேற்றம், வினா, பிரிநிலை,எண்,ஈற்றசை என்ற பொருள்களில் வரும் என அறியப்படுகிறது. மேலும் (தொல்.சொல்.746,757,771,773) என்ற நூற்பாக்களினால் ஏ காரம் இசைநிறை மற்றும் எண்ணிடை சொற்களாகவும் வரும் என்பது அறியப்படுகிறது.*

*என – இடைச்சொல்*

*"வினையே குறிப்பே இசையே பண்பே..."[11] என்பதனைக் கொண்டு 'என' என்னும் இடைசொல்லானது வினை,குறிப்பு,இசை,பண்பு, எண்,பெயர் என்னும் ஆறு பொருண்மைகளைக் கொண்டு பொருளுணர்த்தும் என்பதை அறியமுடிகிறது.*

*'என' என்னும் சொல் சிலப்பதிகாரத்தில் 228 இடங்களில் பயின்று வந்துள்ளது .*

*"வசந்த மாலையை வருக! எனக் கூஉய்த்"[12] என்ற வழி வருக என்னும் பண்புப்பொருளில் 'என ' சொல்லானது இணைப்பிடைச் சொல்லாக இடம்பெற்றுள்ளது.*

*என்று – இடைச்சொல்*

*என்று என்னும் இடைசொல்லானது சிலப்பதிகாரத்தில் 109 இடங்களில் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது.*

*"படுபிணம்! என்று பறித்து அவள் கைக்கொண்டு"[13]*

*மேலும், 'என்று' என்னும் பொருளில்,எனின் – 4,எனும் – 6, என்னும் – 7, என்றனர் -1, என்றாம்-1, என்றனன் -1, என்றே -7, என்றாள் -6 ,என்றள் – 6, என்றென்றும் – 1, என்ற – 4, போன்ற இடைசொற்கள் சிலப்பதிகாரத்தில் பயின்று வந்துள்ளதனைக்காண முடிகின்றது.*

*'என்று' என்பதன் இலக்கண விதியினை (தொல்.சொல். 744) என்ற நூற்பா கூறுகின்றது. இதன் வழியாக என என்பதன் இலக்கனவிதியே 'என்று' என்பதற்கும் பொருந்தி வருகிறது என அறிய முடிகிறது. அத்துடன் என,என்று என்பவை எண்ணிடை சொற்களாக வரும் என்பதனை (தொல்.சொல்.779) என்ற நூற்பா கூறுகிறது.*

*மற்று – இடைச்சொல்*

*'மற்று'என்பதன் இலக்கண விதியினை (தொல்.சொல்.747)என்ற நூற்பாவின் மூலம் அறியலாம். மற்று என்னும் சொல்லானது வினைமாற்று, அசைநிலை என இரண்டு நிலைகளில் வரும்.*

*'மற்று' என்னும் இடைச்சொல் சிலப்பதிகாரத்தில் 4 இடங்களில் இடம்பெற்றுள்ளது.*

*"காண்தகு மரபின அல்ல மற்றவை*
*மற்றவை நினையாது மலைமிசை நின்றோன் "[14] என்ற வரிகளின் வழி மற்று என்னும் சொல் வினைமாற்று என்னும் பொருண்மையில் அமைந்திருப்பதை அறியலாம்.*

*ஆர் – இடைசொல்*

*'ஆர்' என்னும் இடைச்சொல் சிலம்பில் 124 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*"மாநகர்க் கீந்தார் மணம்"[15] என்ற வரியில் உயர்திணைப்பன்மை என்ற பொருண்மையில் 'ஆர்' என்னும் இடைசொல் இடம்பெற்றுள்ளது.*

*"ஆர்" என்பதற்கான இலக்கண விதிகளை (தொல்.சொல்.755,756) என்ற நூற்பாக்கள் கூறுகின்றன.*

*ஆங்க – இடைச்சொல்*

*'ஆங்க' என்னும் இடைச்சொல்லானது 'ஆங்கு' என்பதாக 115 இடங்களிலும் அங்கண் என 1 இடத்திலும் சிலப்பதிகாரதில் இடம் பெற்றுள்ளதனைக் காணமுடிகின்றது.*

*"பெருவிறல் தானம் பலவும் செய்து ஆங்கு..."[16] என்பதன் வழி ஆங்க என்னும் அசைச்சொல்லானது ஆங்கு என்ற உரையசை சொல்லாக இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.*

ஆங்கு என்னும் சொல்லானது உரையசை சொல்லாக வரும் என்பதனை
"ஆங்க உரையசை"[17] என்ற நூற்பா கூறுகிறது

கொல் – இடைச்சொல்
"கொல்லே ஐயம்"[18] என்கிறது தொல்காப்பிய நூற்பா.
கொல் என்னும் இடைச்சொல் சிலப்பதிகாரத்தில் 40 இடங்களில் இடம்பெற்றுள்ளது.
"எல் அவிழ் மாலையொடு என் உற்றனர் கொல்"[19] என்பதன் வழி ஐயம் என்னும் வகையில் வினாபொருளில் 'கொல்' என்னும் சொல் அமைவதைக் காணலாம்.

என்றா
என்றா என்னும் சொல்லானது என்றும், என்றலும் என இரு வகைகளில் காணப்படுகிறது. இச்சொற்களானது எண்ணுப்பெயர்களில் அமைகின்றன.
இதனை, (தொல்.சொல்.774, 775) என்ற நூற்பாக்கள் மூலம் அறியமுடிகிறது.
"முன்னிலை புறமொழி என்றும் கூறுவர்"[20]
"சிலம்பின் வென்றனள் சேயிழை! என்றலும்"[21] கொண்டு அறியலாம்.

ஒடு
சிலப்பதிகாரத்தில் 'ஒடு' என்னும் சொல்லானது 245 இடங்களில் பயின்று வந்துள்ளது. ஒடு என்னும் சொல்லானது ஓடும் என்பதாக 14 இடங்களிலும் ஓடு என்பதாக 38 இடங்களிலும் ஓடும் என்பதாக ஒரு இடத்திலும் இடம்பெற்றுள்ளது.
"மத்தக மணியொடு வயிரம் கட்டிய"[22]
"மாயவன் தன் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும் "[23]
"நீலப் பறவைமேல் நேரிழை தன்னொடும்"[24] என்பவை முறையே ஒடு,ஓடும்,ஒடும் என்னும் சொற்கள் சிலப்பதிகாரத்தில் எண்ணுப்பொருண்மைகளில் அமைவதைக் காணலாம்.
"என்றும் எனவும் ஒடுவும் தோன்றி..."[25] என்ற நூற்பாவானது என்று,என என்பவற்றுடன் ஒடு என்னும் சொல்லும் எண்ணிடை சொற்களாக வரும் என்பதைக் கூறுகிறது. எண்ணிடைச் சொல்லின் தன்மை குறித்து (தொல்.சொல்.778,779)என்ற நூற்பாக்கள் கூறுகின்றன.

முடிவுரை
தொல்காப்பியர் இடையியலில் குறிப்பிட்டுள்ள மன்,உம்,ஓ,ஏ,போலும்,என,என்று,மற்று,ஆர்,ஆங்க,கொல்,ஒடு என்னும் சொற்கள் சிலப்பதிகாரத்தில் பல இடங்களிலும் பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது. மேலும் இவை தவிர்த்த பல இடைசொற்களும் இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. மொழியானது காலம்தோறும் மாற்றத்திற்கு உட்படும் தன்மையுடையது. எனவே காலம் தோறும் இடைச்சொற்களும் தோன்றியும் மாறுபட்டும் மொழிகளில் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. இதனடிப்படையில் காப்பிய காலகட்டத்தில், சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் எவ்வாறான இடைச்சொற்களை தமது இலக்கியத்தில் பயன்படுத்தியுள்ளார் என்பதனை இதன் வழி அறியமுடிகிறது.
தில்,கொன்,குரை,மா,எற்று,மற்றையது,மன்ற, தஞ்சம் அந்தில்,எல்,மியா,இக,மோ,மதி,இகும்,சின்,அந்தோ,அன்னோ,எனா,யா,கா,பிற, பிறக்கு,அரோ,போ,மாது,ஆங்க போன்ற தொல்காப்பியர் குறிப்பிடும் இடைச்சொற்களை சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியமுடியவில்லை.
எனா,எனவும் போன்ற சொற்கள் நேரடியாக பயன்படுத்தப்படவில்லை எனினும் என்னும்,என்றலும் போன்ற மாற்று எண்ணுப்பெயர் வடிவங்களிளும், ஆங்க என்பது ஆங்கண்,அங்கு,அங்கண்,ஆங்கு என்பதாக மாறுபட்டும் வழங்கப்படுகிறது என்பதனைத் தொல்காப்பியர் புறனடையின் கண் குறிப்பிட்டுள்ளார். இதன் வழி தான்குறிப்பிட்ட இடைச்சொற்களே அன்றி பிற இடைசொற்களையும் தொல்காப்பியர் இலக்கண விதிகளின்படி ஏற்கிறார் என்பது அறியப்படுகிறது. இங்கு சிலப்பதிகார கால இடைச்சொற்கள்,தொல்காப்பியர் இடையியலில் கூறியுள்ள வழி ஆராயப்பட்டது.

சான்றெண் விளக்கம்

1.தொல்காப்பியம்,சொல்லதிகாரம், நூற்பா-734.
2.தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,நூற்பா-735.
3.நன்னூல்,சொல்லதிகாரம்,நூற்பா-420.
4.தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,நூற்பா-737.
5.சிலப்பதிகாரம்,காதை1, வரி-29.
6.தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,நூற்பா-740.

7.சிலப்பதிகாரம்,காதை2.,வரி-3.
8.தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,நூற்பா-741.
9.சிலப்பதிகாரம்,காதை7,பாடல்-10.
10.சிலப்பதிகாரம்,காதை7,பாடல்-13.
11.தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,நூற்பா-743.
12.சிலப்பதிகாரம்,காதை8,வரி-69.
13.சிலப்பதிகாரம்,காதை9,வரி-19.
14.சிலப்பதிகாரம்,காதை11,வரி-132,133.
15.சிலப்பதிகாரம்,காதை1,வரி-44.
16.சிலப்பதிகாரம்,காதை15,வரி-181.
17.தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,நூற்பா-762.
18.தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,நூற்பா-753.
19.சிலப்பதிகாரம்,காதை2,வரி-64.
20.சிலப்பதிகாரம்,காதை24,பாடல்-4.
21.சிலப்பதிகாரம்,காதை27,வரி-73.
22.சிலப்பதிகாரம்,காதை6,வரி-91.
23.சிலப்பதிகாரம்,காதை17,பாடல்-28.
24.சிலப்பதிகாரம்,காதை24,பாடல்-16.
25.தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,நூற்பா-779.

துணைநூற்பட்டியல்


- சுப்பிரமணியன்,ச.வே.அறிஞர்,உரையாசிரியர்., ஐம்பெருங்காப்பியங்கள் மூலமும் தெளிவுரையும்,2013,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை-600108.
- தமிழண்ணல் முனைவர்.,
தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,2006,மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை-600108.
- திருஞானசம்பந்தம்,ச. முனைவர்.,நன்னூல் – சொல்லதிகாரம்,2009,கதிர் பதிப்பகம்,திருவையாறு-613 204.


********* ********* ********** ********* ********* ********** ********** **********